# 30-12-2024 செய்தி

## ஆர்வம் காட்டாத வெளிநாடு வாழ் இந்தியர்கள்

**1.19 லட்சம் பேரில் 2,958 பேர் மக்களவை தேர்தலில் வாக்களிப்பு**

- மக்களவை தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்ற 1,19,374 வெளிநாட்டு வாழ் இந்தியர்களில் 2,958 பேர் மட்டுமே தாய் நாட்டுக்கு வந்து தங்கள் வாக்குரிமையை செலுத்தினர் என்பது தெரியவந்துள்ளது.
- மக்களவை தேர்தல் தொடர்பான தரவுகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதில், இந்தாண்டு மொத்தம் 1,19,374 வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர்.
- இதில், கேரளாவை சேர்ந்தவர்கள் 89,839 பேர். ஆனால் மக்களவை தேர்தலில் 2,958 பேர் மட்டுமே இந்தியாவுக்கு பறந்து வந்து தங்கள் வாக்குரிமையை செலுத்தினர். அதில் பெரும்பாலானவர்கள் கேரளாவை சேர்ந்தவர்கள்.
- அந்த மாநிலத்தை சேர்ந்த 2,670 பேர் வாக்களித்துள்ளனர். உபி, தமிழ்நாடு, பீகார், கர்நாடகா போன்ற பெரிய மாநிலங்களை சேர்ந்தவர்கள் வாக்கு செலுத்த விருப்பம் காட்டவில்லை.
- தமிழ்நாட்டை பொறுத்தவரை மொத்தம் 3,432 வெளிநாட்டு வாழ் இந்திய வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 2,805 பேர் ஆண்கள், 627 பேர் பெண்கள், ஆனால், இவர்களில் ஒருவர் கூட வாக்களிக்கவில்லை.
- பிரதமரின் சொந்த மாநிலம் குஜராத்தில் 885 வாக்காளர்களில் வெறும் 2 பேர் மட்டுமே இந்தியாவுக்கு வந்து தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றியுள்ளனர். மகாராஷ்டிராவில் மொத்தம் உள்ள 5,097 பேரில் 17 பேர் வாக்களித்துள்ளனர். ஆந்திராவில் 7,927 பேரில் 195 பேர் வாக்களித்தனர் என்பது தெரியவந்துள்ளது.
- தமிழ்நாட்டில் மொத்தம் 3,432 வெளிநாட்டு வாழ் இந்திய வாக்காளர்கள் உள்ளனர். ஆனால், ஒருவர் கூட வாக்களிக்கவில்லை.

## காலநிலை மாற்றத்தால் உலகின் மிகப்பெரிய அண்டார்டிகா பனிப்பாறை உடையும் அபாயம்

- காலநிலை மாற்றத்தால் உலகின் மிகப்பெரிய அண்டார்டிகா பனிப்பாறை உடையும் அபாயம் உள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

**சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தல்**

- காலநிலை மாற்றம் என்பது உலகின் மிகப்பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இதனால் வரலாறு காணாத மழை, கடல்நீர் மட்டம் உயர்வு போன்ற பல்வேறு அபாயங்கள் ஏற்படுகின்றன.
- மற்றொருபுறம் நிலச்சரிவு, நிலநடுக்கம் ஆகிய இயற்கை பேரிடர்களும் அதிகளவில் நிகழ்கின்றன. எனவே காலநிலை மாற்றத்துக்கு எதிரான நடவடிக்கை எடுக்கும்படி சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

**உலக நாடுகளுடன் ஆலோசனை**

- அதன்படி காலநிலை மாற்றத்தை எவ்வாறு சமாளிப்பது என ஐ.நா. சபையும் உலக நாடுகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறது. இதற்கிடையே 1986-ம் ஆண்டு அண்டார்டிகாவில் உள்ள பில்ச்னர் பனிப்பாறை உடைந்து பிரிந்தது.
- உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான அந்த பனிப்பாறைக்கு ஏ 23 ஏ என பெயரிடப்பட்டது. இது வெட்டெல் கடலில் உள்ள ஓர்க்னி தீவுகளுக்கு அருகே உறைந்தது. பின்னர் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக நகராமல் இருந்து வருகிறது.

**விஞ்ஞானிகள் எச்சரிக்கை**

- இந்தநிலையில் வெப்ப நிலை உயர்வால் ஏ23ஏ பனிப்பாறை தற்போது மீண்டும் உருக தொடங்கி உள்ளது. எனவே அடுத்த ஒரு மாதத்துக்குள் அந்த பனிப்பாறைகள் முழுவதும் உடையும் அபாயம் இருப்பதாக கூறப்படுகிறது.
- அவ்வாறு நடந்தால் அந்த பனிப்பாறைகள் கடலில் கலந்து அதன் நீர்மட்டம் உயரும். இதனால் அதனை சுற்றியுள்ள பகுதிகள் கடலுக்குள் மூழ்கும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எனவே ஏ23ஏ பனிப்பாறைகளை அவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## இந்தியாவில் 'வேவ்ஸ்' மாநாடு

- இந்தியாவில் முதல்முறையாக 'உலக ஒலி ஒளி பொழுதுபோக்கு மாநாடு (வேவ்ஸ்) மாதம் நடைபெறவுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்தார்.
- 'வேவ்ஸ்' மாநாட்டுக்கு ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறை சார்ந்த உலகளாவிய கலைஞர்கள் வருகை தரவுள்ளனர். இது உலக பொருளாதார கூட்டாண்மை போன்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகள் நடத்தும். மாநாட்டுக்கு இணையானதாகும்.
- இந்திய படைப்புகளை உலகளவில் கொண்டுசேர்க்க ஒரு வாய்ப்பாக இந்த மாநாடு அமையும்.

**படைப்பாளிகளுக்கு அழைப்பு**

- சமூக வலைதளம் மற்றும் பிற தளங்களில் புதிய படைப்புகளை உருவாக்கி வரும் நமது இளம் தலைமுறையினரின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை.
- இந்திய பொருளாதாரம் 5 டிரில்லியன் டாலராக உருவெடுக்க இதுபோன்ற புதிய படைப்புகளின் பங்களிப்பு அவசியமானது.

SURESH'